LIBRARY
20 MAY 1966
STATE LEGISLATURE

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Wednesday, 2nd February 1966.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

State Transport buses between Madras and Kancheepuram

* 46 Q.—SRI C. KOTHANDARAMA BAGAVATHAR: Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to run two State Transport buses between Madras and Kancheepuram (via) Ambattur, Avadi, Poonamalli, Sriperumbudur and Wallajabad?

THE HON. SRI R. VENKATARAMAN: No, Sir.

அரசாங்க பஸ்களில் அனைத்து வழி டிக்கட்

* 47 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சென்னை நகரத்தில் ஓடும் அரசாங்க பஸ்களில் உல்லாச பிரயாணிகள் "மனம்போன போக்கில்" போகும் டிக்கட் கொடுக்கும் உத்தேசமுண்டா?

THE HON. SRI R. VENKATARAMAN: No, Sir.

திரு. து. ப. அழகமுத்து: டெல்லி போன்ற இடங்களில் வெளி ஊர்க்காரர்கள் சுற்றிப் பார்ப்பதற்கு பஸ் ஏற்பாடு செய்து தருகிறார்கள். அது போன்று நம்முடைய சர்க்காரும் ஏற்பாடு செய்தால் பொது மக்களுக்கு உதவியாக இருக்கும் அல்லவா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: சென்னையிலே ஸைட் ஸீயிங் பஸ் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் போய்க்கொண்டிருக்கிறது. இந்தக் கேள்வி "கோ ஆஸ் யூப்ளிஸ் டிக்கட்" கொடுக்கவேண்டும் என்பது பற்றி. இதற்குக் கட்டுப்படியாகாது. ஆதலால் நஷ்டம் ஏற்படும் என்ற காரணத்திற்காக எடுத்துக்கொள்ளப்படவில்லை.

Transport Department

* 48 Q.—SRI C. KOTHANDARAMA BAGAVATHAR: Will the Hon. the Minister for Industries be pleased to state the telephone and trunk call charges and postage service expenditure incurred in the Transport Department by the State Transport Authority, as well as by the Regional Transport Officers all over Madras State during the period 1963–64 and 1964–65 up to 31—7—1965?

[2nd February 1966

THE HON. SRI R. VENKATARAMAN: In 1963-64 Rs. 1,70,998.27; 1964-65—Rs. 1,63,849.62 and 1965-66 (up to 31—7—1965)—Rs. 77,268.55.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொடுத்த பதிலில் இருந்து பஸ் போக்குவரத்து இலாக்காவில் டெலிபோனை அதிகமாகக் கையாளுகிறார்கள் என்று தெரிகிறது. அனுவசியமாக டெலிபோனை உபயோகப்படுத்துவதைத் தடுப்பதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அனுவசியமாக உபயோகப் படுத்துவதல்ல. டெலிபோனை உபயோகப்படுத்துவதின் மூலம் துரிதமாக காரியங்கள் செய்யமுடியும். கடிதம் எழுதி, போய்ப் பார்த்து செய்யும் முடிவுகளையெல்லாம் விட டெலிபோன் மூலம் சொல்லி அமல் நடத்துவது வசதியாக இருக்கிறது.

திரு. இராம. அரங்கண்ணல் : சராசரியாக மாதத்திற்கு 20,000 ரூபாய்க்கு மேல் இதற்காக செலவழிக்கப்படுகிறது. மேலும், இந்த டெலிபோன் கட்டணத்தை இப்பொழுது உயர்த்தியிருக்கிறார்கள். ஆகையால், செலவு இன்னும் அதிகமாகும். இதையொட்டி சர்க்கார் நிறுவனங்களுக்கு கன்ஸெஷன் கொடுக்கவேண்டுமென்று மத்திய அரசுக்குத் தெரிவிக்கும் உத்தேசம் உண்டா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது டெலிபோன், கரஸ்பான்டன்ஸ் எல்லாம் சேர்ந்த புள்ளிவிவரம். டெலிபோன் மாத்திரம் எடுத்துக்கொண்டால் 1961-62-க்கு ஏழாயிரத்தி சில்லரை ரூபாய், 1962-63-க்கு 6,700 ரூபாய்; 1964-64-க்கு ரூபாய் ஆராயிரத்தி சில்லரை; 1964-65-க்கு 8,000 ரூபாய் ஆகிறது. மற்றவையெல்லாம் தபால் செலவு போன்றவை. மத்திய அரசாங்கத்தைக் கன்ஸெஷன் கேட்பது நன்றாக இருக்காது.

திரு. எ. கொ. பாலகிருஷ்ணன் : சொந்தக் காரியத்திற்கு டெலிபோனில் பேசுவது மட்டுமல்லாமல் தங்களது சொந்த விஷயங்களுக்காகவும் டெலிபோனை உபயோகப்படுத்துவதினால் செலவு கூடியிருப்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : விதிகளின்படி சொந்தக் காரியங்களுக்கு உபயோகப்படுத்தக்கூடாது.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, ஒரு குறிப்பிட்ட ஆண்டில் ஒரு லட்சத்திற்குமேல் டெலிபோன் செலவு ஆகியிருப்பதாக முதலில் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது குறிப்பிட்டார்கள். அடுத்தாற்போல் பதில் சொல்லும்போது டெலிபோனுக்கு மட்டும் 6 ஆயிரம் தான் ஆகிறது என்று கூறியிருக்கிறார்கள். மீதம் இருக்கக்கூடிய பணம் தபால் செலவுக்கு ஆகியிருக்கமுடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : முடியுமா என்பதல்ல. ஆகி இருக்கிறது என்று கணக்கு இருக்கிறது.

2nd February 1966]

திரு. எ. கொ. பாலகிருஷ்ணன்: சொந்த காரியத்திற்கு டெலிபோன் உபயோகப்படுத்தக்கூடாது என்று விதி இருக்கிறது. அப்படிப் பேசினர்கள் என்று குறிப்பாக எடுத்துச்சொன்னல் என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அவர்கள் மீது டிசிப்ளினரி ஆக்ஷன் எடுத்துக்கொள்ளப்படும், தண்டனை விதிக்கப்படும்.

திரு. எம். எஸ். மணி: அப்படிப் பேசுகிருர்களா இல்லையா என்பதைப் பரிசீலிக்க அரசாங்கம் என்ன யுக்திகளைக் கையாளுகிறது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: நிர்வாகத்திலே பலரை நம்பித்தான் நடத்தவேண்டியிருக்கிறது. விதிகள் போட்டு அவ் விதிகளுக்குட்பட்டு சிப்பந்திகள் இருக்கவேண்டுமென்று சொல்லுகிருேம். தவறு செய்கிறவர்களை தண்டிக்கலாம். எல்லோரும் தவறு செய்கிருர்கள் என்று நினைத்தால் நிர்வாகமே நடத்த முடியாது.

திரு. சா. கணேசன்: தபால் செலவு கூடுதலாவதற்கு சில முக்கியமான காரணங்கள் உண்டு என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? குறிப்பாக 10 காசு ஸ்டாம்ப் ஒட்டவேண்டிய சாதாரண புக்போஸ்ட் என்ருலும் கூட சில சமயங்களில் 10 பைசா ஸ்டாம்ப் இல்லாத காரணத்தினுல் 15 பைசா, 25 பைசா ஸ்டாம்புகள் ஒட்டி வந்துகொண்டிருக்கின்றன. மாநில ஆட்சியில் இருந்தும் ஜில்லா ஆட்சித்துறையிலிருந்தும், இந்தத் தவறைத் தடுப்பதற்குத் தக்க ஆணை பிறப்பிக்கப்பட்டனவா? இதை அரசாங்கத்தின் கவனத்திற்கு சமீபத்தில் கொண்டு வந்தேன். அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கனம் உறுப்பினர் சமீபத்தில் சட்டசபையில் சொன்னதைத் தவிர வேறு எந்தவிதமான தகவலும் இல்லை. இந்தவிதமாக கனம் உறுப்பினர் ஒன்றிரண்டு கடிதங்களை அனுப்பினுல் அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளத் தயாராய் இருக்கிருேம்.

MR. SPEAKER: Has the honourable Member received any such communication from the Legislative Assembly Department?

திரு. சா. கணேசன்: எனக்கு லெஜிஸ்லேசர் டிபார்ட்மெண்டிலிருந்து இதுமாதிரி வரவில்லை. ராஜ்ய செக்ரேட்டேரியட்டிலிருந்து அப்படிக் கடிதங்கள் வந்திருக்கின்றன.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கனம் உறுப்பினர் அவர்கள் ஒன்றிரண்டு கடிதங்களை அனுப்பினுல் உடனடியாக தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும். மீண்டும் சர்க்கார் கண்காணிக்க வேண்டும் என்ற உத்தரவும் பிறப்பிக்கும்.

திரு. இராம. அரங்கண்ணல்: தமிழ் நாடு பூராவும் நெட் வொர்க்காக அரசாங்க பஸ் சென்றுகொண்டிருக்கிறது. வெளி ஊர்

[2nd February 1966

களிலுள்ள இலாக்காக்களுக்கு தகவல் அனுப்பும்போது அந்தந்தக் கடிதங்களை அந்தந்த ஊர்களில் செல்லுகின்ற பஸ்களில் அனுப்புவதற்கு ஏற்பாடு செய்யலாம் அல்லவா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இண்டியன் போஸ்ட் அன்ட் டெலிகிராப் ஆக்ட் பிரகாரம் அப்படிச் செய்யக்கூடாது.

Madras Chit Funds Act, 1961

* 49 *Q*.—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government are aware of the observations made by the Madras High Court in a recent Judgment that section 52 of the Madras Chit Funds Act, 1961, is wholly irrelevant for the purpose underlying the Act: and

(*b*) if so, the action proposed to be taken thereon?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) The matter is under examination.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: *தலைவர் அவர்களே, இந்த சர்க்கார் அதிகாரம் பெற்ற சிட்டுகளை விட போலிச் சிட்டுகள் தான் நாட்டில் நடமாடிக்கொண்டிருக்கின்றன. இதனால் ஏழைகள் பாதிக்கப்படுகிறார்கள் என்பது சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டால், அதன்மீது என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்?*

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: *சர்க்கார் கவனத்திற்குக் கொண்டு வந்தால்தான் இந்தியாவிலேயே நம்முடைய மாநிலத்தில் முதல் முதலாக இந்தச் சட்டத்தை செய்தோம். அதற்கு முன்பு திருவாங்கூரிலே இதுமாதிரி ஒரு சட்டம் இருந்தது. ஓரளவிற்குத்தான் அது செயல்பட்டது. இப்பொழுது நம்முடைய ராஜ்யம் பூராவும் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். இந்தச் சட்டத்தைப் பார்த்துத்தான் டெல்லி ராஜ்ய சர்க்கார் கூட அவ்வாறு செய்திருக்கிறது.*

கனம் சபாநாயகர்: *அப்படி வந்தால் என்ன நடவடிக்கைகள் எடுப்பார்கள் என்று கேள்வி கேட்கக் கூடாது. இப்படி நடந்திருக்கிறது, அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்று கேட்க வேண்டும். இது* hypothetical question.

Sri V. SANKARAN : May we know the reasons given by the High Court for holding that section 52 is fully irrelevant for the purpose underlying the Act?

Mr. SPEAKER : The reasons will be there in the judgment.